விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 172 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (09.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## இலங்கை - இந்திய கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

### யாழ்.இந்தியத் துணைத் தூதர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான கப்பல் போக்குவரத்து சேவைகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் நம்பிக்கை வெளியிட்டார்.

சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையேயான அலையன்ஸ் எயர் மூலம் இயக்கப்படும் 100வது விமானச் சேவை நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா மற்றும் இலங்கை இடையே தொடர்பிணை பேணுவதற்கு

15

## வவுனியாவில் மருத்துவர் சுட்டுப் படுகொலை

### கொலையாளிக்கு மரண தண்டனை; வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

வவுனியாவில் மருத்துவர் ஒருவரை சுட்டுப்படுகொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவருக்கு வவுனியா மேல்நீதிமன்றம் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

வவுனியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 20 ஆம் திகதி கற்குழியில் அமைந்துள்ள

15

## மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரணவாய்)

வீதியைக் கடக்க முற்பட்ட சமயம் மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சுப்ரமணியம் மனோகரன் (வயது- 45) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை 5.20 மணியளவில் கொடிகாமம் - பருத்தித்துறை வீதி

15

# இனப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### தமிழரசுக் கட்சியுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

தேசிய இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியினருடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று ஜனாதிபதி செயலகத்

02

## யாழ்ப்பாணத்தில் போதையுடன் தொடர்புடைய

### 15 பேர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருளுடன் தொடர்புடைய 15 பேர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள

15

## கைது செய்யப்பட்டது சட்டவிரோதம் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது

### உரிய நடவடிக்கை தேவை - சபையில் கஜேந்திரகுமார்



(கொழும்பு)

தாம் சட்டரீதியற்ற முறையில் கைது செய்யப்பட்டதன் மூலம் தமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர

02

## அளவுக்கு அதிகமான ஹெரோயின் பாவனை

### யாழில் இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

அளவுக்கு அதிகமாக ஹெரோயினை ஊசிமூலம் செலுத்திய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நாயன்மார்கட்டு, நல்லூரைச் சேர்ந்த நித்தியானந்தா நிமோகாந் (வயது-26) என்பவராவார்.

கடந்த மூன்று வருடங்களாக ஹெரோயின் பாவனைக்கு அடிமை

15

## பத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகள்

### லங்கா சதொசவில் குறைப்பு

(கொழும்பு)

10 அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோகிராம் பாசிப்பயறின் விலை 325 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது.

இதன் படி, ஒரு கிலோ கிராம் பாசிப்பயறின் புதிய விலை 1,225

15

## வடமராட்சியில் 125 கிலோ கஞ்சா மீட்பு

(கரணவாய்)

வடமராட்சிகிழக்கு மாமுனை கடற்பரப்பில் மிதந்து வந்த 125 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்

15

## பெண்கள், முதியவர்களிடம் தொலைபேசி திருட்டு

### புத்தளத்தைச் சேர்ந்த பிரதான சந்தேகநபர் யாழில் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு சில மாதங்களாக தனியார் பேருந்துகளில் செல்லும் பெண்கள், முதிய

02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S வீதி, சுன்னாகம்.
BARATHY
சித்தன்கேணி
எமது மூன்று நிறுவனங்களிலும் மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களினால்
A/L 2025
கலை - வர்த்தகம்
நாளை மறுதினம் 11.06.2023 ஞாயிறு ஆரம்பம் (C-6697)
Note :
கற்பித்தல் காலம் போதாமையினால் தாமதியாது உங்கள் அனுமதிகளினை விரைவாக பெற்றுக்கொள்ளவும்.
மேலதிக தொடர்புகளுக்கு :
யாழ். நகரில் - 077 220 9651
சுன்னாகத்தில் - 075 916 0417
சித்தன்கேணியில் - 077 940 8682

## கைது...

குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று சிறப்புரிமை ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய அவர் அறிக்கை ஒன்றை முன்வைத்தார்.

அதில் மருதங்கேணியில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்கள், இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்து அவர் விளக்கமளித்தார்.

அத்துடன் தாம் சபாநாயகரை தொடர்பு கொண்ட போதும், அவரின் தொடர்பு கிடைக்காமையால், பிரதி சபாநாயகருடன் தொடர்பு கொண்டு, பாராளுமன்றில் சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பிய பின்னர், மருதங்கேணி பொலிஸார் 12 ஆம் திகதி வாக்குமூலம் வழங்க உடன்பட்டதாக கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

எனினும் இதனை புறக்கணிக்கும் வகையில் தம்மை நேற்று முன்தினம் காலை மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள், கொழும்பில் உள்ள வீட்டில் வைத்து கைது செய்ததாக கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

தாம் கைது செய்யப்படுவதற்கு முன்னர் சபாநாயகரை தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதாகவும், இதன்போது, கைதுக்கான நீதிமன்ற உத்தரவு சமர்ப்பிக்கப்படாவிட்டால், பாராளுமன்றத்துக்கு வந்து சிறப்புரிமை பிரச்சினையை எழுப்புவதை பொலிஸ் தடுக்க முடியாது என்று சபாநாயகர் உறுதியளித்திருந்தார்.

எனினும் அதனையும் மீறி பொலிஸாரின் உயர்மட்ட கட்டளையின்படி தாம் கைது செய்யப்பட்டதாக கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

எனவே தமது கைது சட்டவிரோதமானது என்றும் இது தொடர்பில் சபாநாயகர் உரிய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோரிக்கை விடுத்தார்.

இந்தநிலையில் கஜேந்திரகுமாரின் அறிக்கைக்கு தாம் பதில் வழங்கப் போவதில்லை என்றும் இந்த விடயம், பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உறுதியளித்தார்.(ம)

## இனப்...

தில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடனான கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுக்களின் தொடர்ச்சியாக இந்த பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இதன்போது கடந்த காலங்களில், தமிழர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை விரைந்து நடைமுறைப்படுத்துமாறு தமிழரசுக் கட்சியினால் வலியுறுத்தப்பட்ட நிலையில் அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக 19 ஆம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அதன் பின்னர் ஜனாதிபதியை சந்திக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ம)

## பெண்கள்,...

வர்களை இலக்கு வைத்து தொலைபேசி திருடும் கும்பலை சேர்ந்த புத்தளம் பகுதியைச் சேர்ந்த பிரதான சந்தேக நபர் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரிடம் இருந்து திருடப்பட்ட 9 தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்


மேலும் திருடிய தொலைபேசிகளை வாங்கிய நால்வரும் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் மானிப்பாய் வீதியில் பயணிக்கும் பேருந்துகளில் பயணம் செய்யும் வயது முதிர்ந்தவர்கள், பெண்களின் தொலைபேசிகளை மிகவும் சூட்சுமமான முறையில் திருடி வந்த புத்தளம் பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் நேற்று யாழ் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸ் உபபரிசோதகர் பிரதீப் தலைமையிலான பொலிஸ் அணியினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

மேலும் சந்தேக நபரிடமிருந்து 9 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் கைத்தொலைபேசி தொலைத்தவர்கள் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவில் உரிய முறைப்பாடுகளை காண்பித்து தொலைபேசிகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளனர். (ம-33)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 25 பரப்பு காணி விற்பனைக்கு
◆கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில்
பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம்
(இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
◆கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
◆இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
◆குடியிருப்புகள் சூழ உள்ள காணி
076 739 0413
076 436 5814
(15900)

## மரண அறிவித்தல்



# சிவகுரு சச்சிதானந்தம்

புதுக்குடியிருப்பு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு சச்சிதானந்தம் அவர்கள் (07.06.2023) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - வியாழம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகலட்சுமியின் பாசமிகு கணவரும் சகுந்தலாதேவி, கமலாதேவி(அமரர்), பரமேஸ்வரன், சிவநேஸ்வரன், குணதேவி, தவப்புதல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.06.2023 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
077 277 4077 (மகள்) (C-6695) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மலர்வு 15 . 02 . 1945
உதிர்வு 06 . 06 . 2023

# திருமதி வைத்தியலிங்கம் பொற்கொடி

பண்ணாகத்தைச் சேர்ந்த வைத்தியலிங்கம் பொற்கொடி அவர்கள் 06.06.2023 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்தியர் செல்லத்துரை வைத்தியலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் அன்னம்மா, சிவரஞ்சி, துரையரங்கன் (ஜேர்மனி), பராடேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் செ.ஸ்ரீகிருஷ்ணராசா, அ.கிருஷ்ணமூர்த்தி, து.சாந்தினி, காலஞ்சென்ற த.ஹரன் ஆகியோரின் மாமியாரும் காருண்யா, சரண்யா, நகுல், ஹம்சினி, மகிபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான வாமதேவன், சபாரட்ணம் மற்றும் லோகநாயகி, தவராசா, அமரர் செல்வராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (10.06.2023) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், ஊரவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(15901) தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் கந்தையா சாமி

( K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர் )

மலர்வு : 01.11.1934 உதிர்வு : 09.06.2009

அன்பின் உறைவிடமே
எமை ஆராதித்த தெய்வமே
எள்ளெனினும் அதை
ஏழாய் பகிர்ந்தளிக்க எமக்கு
கற்றுத்தந்த ஆசானே
ஆண்டுகள் ஓடும்
உம் நினைவுகள் எம்முடனே வாழும்

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் திருமதி யசோதா திரவியம்

( K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர் சாமி அவர்களின் மகள் )

மலர்வு : 31.05.1966 உதிர்வு : 20.06.2021

ஈராண்டு ஓடி மறைந்திட்டுதம்மா
உன் சிரித்த முகத்தை நாம் பார்த்து
யாருக்கும் ஒண்டென்றால்
ஓடோடி வந்து முதலாய் நிற்பாயே -இப்போ
எங்கே போனாய் அன்பு அக்கா (15883)

1/5, பலாலி வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரை கைப்பற்றியது இலங்கை




ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான 3 ஆவதும் இறுதியுமான போட்டியில் 9 விக்கெட்களால் வெற்றி பெற்று இலங்கை அணி தொடரை 2-1 என கைப்பற்றியுள்ளது.

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று அப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இலங்கை அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் 22.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 116 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அவ்வணி சார்பாக மொஹமட் நபி 23 ஓட்டங்களையும் இப்ராஹிம் சத்ரான் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் சமீர 4 விக்கெட்களையும் பணிந்து ஹசரங்க 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதனை தொடர்ந்து 117 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 16 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றி பெற்றது.

அவ்வணி சார்பாக திமுத் கருணாரத்ன ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பத்தும் நிசங்க 51 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை இலங்கை அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. (4)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி கொற்றாவத்தை றேஞ்சஸ் சம்பியன்

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் கொற்றவத்தை றேஞ்சஸ் அணி வீரர் மதுசாந்தின்ஹெற்றிக் கோல்களினால் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது றேஞ்சஸ் அணி.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன் கிழமை குறித்த கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து இளவாளை யங்ஹென்றிஸ் அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் பலமாக மோதிக் கொண்ட போதிலும் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக றேஞ்சஸ் அணி வீரர் மதுசாந், தொடர் ஆட்ட நாயகனாக றேஞ்சஸ் அணி

ஆர்த்திகன் சிறந்த கோல்காப்பாளராக றேஞ்சஸ் அணி வீரர் ஆர்நிகனும், மக்கள் மனம் கவர்ந்த வீரனாக றேஞ்சஸ் அணி வீரர் ரவிவர்மன், வளர்ந்து வரும் வீரராக யங்ஹென்றிஸ் அணி வீரரும் தெரிவு செய்யப்பட்டனர். (4-90)




# உதைபந்தாட்ட போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் சுற்று கிண்ண போட்டியில் நாளை. வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சென். நீக்கிலஸ் விளையாட்டு கழகமும் திருக்குமரன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

அரியாலையில் உள்ள யாழ். உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் குறித்த போட்டி நடைபெறவுள் ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர் . (4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2848

மதுமிதா

ஸ்டுடன்ற்-
சேர் எனக்கு ஒரு நாள் லீவு வேணும்
சேர்- இங்கிலிஸ் ல ஒரு லீவு லட்டர் எழுதிட்டு வா தாரேன்.
ஸ்டுடன்ற்- எனக்கு லீவு வேணாம்.




யுவன்

வெயில் அடிக்குதுனுதானே லீவு விடுறாங்க.



பயல்கள் பூராவும் வெயிலில்தான் பற்றை தூக்கிட்டு திரியிறாங்க.

திலானி

ஹலோ சேர்.. எப்ப ஸ்கூல் திறப்பீங்க?
இங்க எங்க அம்மாவ வச்சு மேய்க்க முடியல
ஒரே டார்ச்சரா இருக்கு...



சுபாசினி

அண்ணே கடவுள் எல்லார் வீட்டுலயும் இருக்க முடியாதுன்னு தான் அம்மாவை கொடுத்தார்.



பொண்டாட்டிய ஏன்டா கொடுத்தார்?
கடவுளை மறந்துட கூடாதுல்ல அதுக்குத் தான்னே

நவனீதா

கல்யாணம் ஆன புதுசுல தோசை சுடவா...
இல்ல இட்லி சுடவானு கேப்பா...




இப்ப தோசை சுடவா இட்லி சுட வா னு கூப்பிடுறா...

கவிநயா

படிக்கிற பசங்க ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் தூங்குனா போதும் டா...




வீட்லயா? பள்ளிக் கூடத்திலையா மேடம்?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத இறுதிவரை
## மரக்கறி விலை உயர்வாக இருக்கும்

(கொழும்பு)

இம்மாத இறுதி வரை மரக்கறி விலை உயர்வாக இருக்கும் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சந்தையில் மரவள்ளிக்கிழங்கு மற்றும் பலாக்காய்களுக்கு அதிக கேள்வி காணப்பட்டது.

சந்தையில் ஒரு கிலோகிராம் மரவள்ளிக்கிழங்கு மற்றும் பலாக்காயின் விலை நேற்று 200 ரூபாவாக அதிகரித்துள்ள தாக சந்தை வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

இதனால், நுகர்வோர் அதிக சிரமங்களை சந்தித்து வருகின்றனர். அண்மைய நாட்களாக கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் பலாக்காய்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக சந்தை தரவுகள் தெரிவிக்கின்றன.

இதுவரை போஞ்சி, கெரட், வெண்டைக்காய், பீட்ரூட், நோகோல், கறிமிளகாய், பாகற்காய் போன்ற காய்கறிகளின் மொத்த விலை 250 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இருப்பினும், மொத்த விற்பனை விலை இவ்வாறு பதிவு செய்யப்பட்டாலும், சில்லறை சந்தையில் விலைகள் முற்றிலும் மாறுபட்ட மதிப்பைக் கொண்டுள்ளன. (நி)

# குழந்தைகளுக்கு கைபேசிகளை வழங்குவதால் பார்வை இழக்கப்படும் அபாயம்
## கண் மருத்துவ நிபுணர் எச்சரிக்கை


(கொழும்பு)

முதலாம் தரத்தில் பிரவேசித்த மாணவர்களுக்கென பாடசாலையொன்றின் ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கண், பற்கள் மற்றும் காது தொடர்பான பரிசோதனையின்போது ஆறு பிள்ளைகளுக்கு, 10 மற்றும் 12 மீற்றர் இடைவெளியில் உள்ள எழுத்துக்களை வாசிக்க முடியாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. குழந்தைகள் அழும் போது ஆறுதல் கூறவும், அவர்களுக்கு உணவளிக்கவும், மருந்து மற்றும் திரவங்களை வழங்கவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முன்பள்ளி வயது முதலே கையடக்கத் தொலைபேசிகளை வழங்கி வருவதாக சுகாதாரத் துறை மற்றும் ஆசிரியர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது செய்யக்கூடாத ஒன்று எனவும் இதனால் எதிர் காலத்தில் பிள்ளைகளின் கல்வி கூட பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் எனவும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட இலத்திரனியல் உபகரணங்களின் பாவனையே சிறு பிள்ளைகளின் கண் கோளாறுகளுக்குக் காரணம் என சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் முன்னாள் கண் மருத்துவ நிபுணர் தர்மா இருகல்பண்டார தெரிவித்தார். (நி)




# இராசிபலன்

09.06.2023
வைகாசி 26, வெள்ளிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.31 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 9.18 மணிவரை
சுபநேரம்-5.52-7.22 மணிவரை
இராகுகாலம்-10.22-11.52 மணிவரை

சந்திராஷ்டமம்-
புனர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**ரிஷபம்**: வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியமான நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**கடகம்**: கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, நேசித்த ஒருவருடன் யோசித்து பேசும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்**: நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி**: மறைமுகப் போட்டிகள் மாறும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், காரிய அனுகூலமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்**: கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்**: சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு**: பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும்.

**மகரம்**: பொது வாழ்வில் புகழ் கூடும், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்**: வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், நேற்றைய பிரச்சினை ஒன்று இன்று முடிவுக்கு வரலாம்.

**மீனம்**: தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்.

பணத்திற்கு அடிமையாகி பாவத்தைச் செய்யாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடி
# யாழில் 18 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

**முறையான அனுமதிப்பத்திரமின்றி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டமை மற்றும் அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் டைவிங் உபகரணங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.**

மீனவர்களுடன் 669 கடலட்டைகள், 6 டிங்கிகள், டைவிங் கருவிகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்டவர்கள் 18 முதல் 42 வயதுக்குட்பட்ட கல்பிட்டி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனப்படுகிறது.

கைதானவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (4-33)



உலக சமுத்திர தினத்தை முன்னிட்டு கடல் வளத்தை பாதுகாக்கும் நோக்கில் கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச உத்தியோகத்தர்களால் அல்லைப்பிட்டி கடல் கரைப்பகுதியில். நேற்று கண்டல் தாவர நடுகை செய்யப்பட்டது.



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித மன்றத்தால் நடத்தப்பட்ட கணித கற்றல் உபகரண தயாரிப்பு போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

## வாள் செய்து கொண்டிருந்த நால்வர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் சட்டவிரோதமாக வாள் செய்து கொண்டிருந்த நால்வரை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீடொன்றில் வைத்து வாள் செய்து கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வீட்டினை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அதன்போது வாள் செய்து கொண்டிருந்த நால்வரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

## 2 ஆம் சங்கிலிய மன்னனின் 404 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் கடைசி தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியனின் 404 ஆவது நினைவு தினம் நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கிலிய மன்னன் .நினைவு தினக்குழு தலைவர் பா. பாலகணேசன் தலைமையில் நடைபெறும். (4-33)

## தனியார் கல்வி நிறுவனங்களுடன் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை கல்விக்கு மேலதிகமாக வாரத்தில் ஏழு நாட்களும் ஓய்வின்றி கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் மாணவர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் சாதக பாதக விளைவுகளும் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் தொடர்பாக தனியார் கல்வி நிலையங்களுக்கான கலந்துரையாடல்,

யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது .

இதில் சுகாதாரம், கல்வி, மதத் தலைவர்கள், பொலிஸ், தனியார் கல்வி நிலைய நிறுவனங்கள், பெற்றோர், மாணவர்கள் போன்ற தரப்பினர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## கருவி நிறுவனத்தின் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருவி நிறுவனத் தலைவர் திரு.க.தர்மசேகரம் தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி.கோசலை மதன் சிறப்பு விருந்தினராக வடமாகாண சமூகசேவைத்திணைக்களப் பணிப்பாளர் செல்வி அகல்யா செகராஜா கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்விவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சுப்ரமணியம் ஸ்ரீகுமரன் , KARUVI (SRDA)-UK அறங்காவலர் சபைத் தலைவர் திரு சிவாஜிசேகரம் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4)

### வடக்கு இளைஞர் யுவதிகள்

# விளையாட்டுத்துறையில் சாதிக்க முயற்சிகள் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்

## விளையாட்டுத்துறை அமைச்சிடம் அங்கஜன் எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரோஷான் ரணசிங்கவை நேற்று பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் சந்தித்து கலந்துரையாடினார்.

விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று காலை குறித்த சந்திப்பு இடம்பெற்றது.



இதன்போது, வடக்கிலுள்ள இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை தடுப்பதற்கு அவர்களின் பொழுதுபோக்கு நேரத்தை விளையாட்டுத்துறையின் மீது திருப்ப நாம் பங்காற்ற வேண்டும் என்பதை அங்கஜன் இராமநாதன் எடுத்துரைத்தார்.

யுத்தத்துக்கு பின்னதாக எமது இளைஞர்கள் குறிப்பிடத்தக்க அளவில் விளையாட்டுத் துறையில் சாதித்து வருகிறார்கள்.

பாடசாலை மட்டம், கழக மட்டம், பல்கலைக்கழக மட்டம், தேசிய ரீதியில் என பல இளைஞர் யுவதிகள் உள்நாட்டிலும், சர்வதேச போட்டிகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இவர்களில் பலர் தமக்கான உபகரணங்கள், பயிற்சிகளுக்கான செலவுகளை தாமே மேற்கொண்டு வருகின்றனர். பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள வீர வீராங்கனைகள் தமது திறமைகளை வளர்ந்துக் கொள்ளவும் போட்டிகளில் கலந்து கொள்ளவும் போதிய நிதிவசதிகளின்றி உள்ளனர்.

இதனால் விரக்தியடையும் நிலையும் அவர்களிடத்தே காணப்படுகிறது.

அதேபோன்று வடக்கு கிழக்கை சேர்ந்த வீரர்களின் தேசிய அணிகளுக்கான தெரிவுகள், அதனை நோக்கியதான பயிற்சி ஏற்பாடுகள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் எடுத்துரைத்தார்.

மேலும், யாழ் மாவட்ட விளையாட்டுத்துறைசார் தேவைகளை தீர்த்து வைக்குமாறு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசனிடமும் கோரிக்கையை முன்வைத்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் உரிமைகள் அரசியல் சுதந்திரம் இலங்கையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

### பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

(லண்டன்)

இலங்கை பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இலங்கையில் சிவில் உரிமைகளும் அரசியல் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பிரிட்டன் அரசாங்கம் குரல்கொடுக்கவேண்டும் என்று அந்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர் எர்வர்ட் டேவி வெளிவிவகார செயலாளரிடம் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தொடர்பில் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் கடும் கண்டனங்களும் விமர்சனங்களும் எழுந்துள்ளன.

குறிப்பாக பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கஜேந்திரகுமாரின் கைது தொடர்பில் கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்த நிலையில், இதுகுறித்து பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் டேவி அந்நாட்டு வெளிவிவகார செயலாளருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தற்போது இலங்கை பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், இலங்கையில் சிவில் உரிமைகளும் அரசியல் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படுவதை முன்னிறுத்தி பிரிட்டன் அரசாங்கம் குரல்கொடுப்பது அவசியம் என்றும் எர்வர்ட் டேவி எம்.பி அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ()

# மிக மோசமான வறுமையின் பிடியில் இலங்கை

### கருத்துக்கணிப்பில் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் வறியவர்களின் எண்ணிக்கை நான்கு முதல் ஏழு மில்லியனாக அதிகரித்துள்ளமை கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.**



2019 முதல் 2023 ம் ஆண்டிற்குள் நான்கு முதல் ஏழு மில்லியன் மக்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் இலங்கையில் வறுமையின் பிடியில் சிக்குண்டுள்ள மக்களின் எண்ணிக்கை இந்த காலப்பகுதிக்குள் 31 வீதமாக அதிகரித்துள்ளது என்பதும் லிர்னே ஏசியா என்ற பிராந்திய கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆய்விற்குட்படுத்தப்பட்ட 10,000 பேரில் 33 வீதமானவர்கள் தாங்கள் பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் உணவை தவிர்த்துள்ளதாகவும் 47 வீதமானவர்கள் உணவை குறைத்துக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

27 வீதமானவர்கள் தங்கள் பிள்ளைகளிற்கு உணவை வழங்குவதற்காக தங்கள் உணவை குறைத்துக் கொண்டுள்ளனர், அத்துடன் இலங்கையில் ஆறு வீதமானவர்கள் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்பதும் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது. இதன் மூலம் 203000 சிறுவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை என்பதும் தெரியவந்து ள்ளது.

.பெற்றோர்கள் தங்களிடம் பிள்ளைகளிற்கு கொப்பிகள் வாங்குவதற்கான பணம் இல்லை என தெரிவித்துள்ளதுடன் பழைய கொப்பிகளில் எழுதப்படாத பக்கங்களை . பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# ஒப்பந்தத்தை மீறிய 618 நிரப்பு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஒப்பந்தங்களின் நிபந்தனைகளை மீறும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தொடர்பில் மீளாய்வு செய்து அவர்களுக்கெதிராக தேவையான சட்ட நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டு ஸ்தாபனத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டு ஸ்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையங்களின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டு ஸ்தாபனத்தின் கீழ் இயங்கும் 1050 எரிபொருள் நிலையங்களில் 432 எரிபொருள் நிலையங்கள் மாத்திரமே கடந்த வாரம் சகல எரிபொருட்களிலும் குறைந்த பட்ச கையிருப்பை பேணியுள்ளமை தெரியவந்துள்ளது.

255 எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எந்தவொரு எரிபொருளிலும் குறைந்த பட்ச இருப்பை பேணத் தவறியுள்ளமையும் இனங்காணப்பட்டுள்ளது.

அதேவேளை 363 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஏதேனும் ஒரு எரிபொருள் இருப்பு மாத்திரமே பேணப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறு ஒப்பந்தங்களுக்கு முரணாக செயற்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டு ஸ்தாபனத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (4)

## பெயர் மாற்ற அறிவித்தல்

இல:1010/12 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் நவரத்தினம் குணேந்திரராசா என்னும் எனது பெயரை நவரத்தினம் குணேந்திரராஜா எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே 09.06.2023 முதல் எனது சகல ஆவணங்களிலும் மேற் குறித்த குணேந்திரராஜா என்னும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கையில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

**உண்மையுள்ள**
**நவரத்தினம் குணேந்திரராஜா.**

(5890)

## பெயர் மாற்ற அறிவித்தல்

கல்லுபிடுங்கி, கொல்லங்கலட்டி எனும் முகவரியை உடைய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ஜெயாதீஸ்வரன் எனவும் விவாகப் பதிவுப் பத்திரத்தில் ஜெகாதீஸ்வரன் எனவும் பதியப்பட்டுள்ளது.எனவே 09.06.2023 முதல் எனது பெயரினை ஜெகதீஸ்வரன் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் ஜெகதீஸ்வரன் எனும் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**உண்மையுள்ள- சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன்.**

(15865)

# இலங்கை- மாலைதீவு இடையே மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவுக்கிடையில் சுகாதார ஒத்துழைப்பு, கலாச்சார ஒத்துழைப்பு மற்றும் இலங்கையில் மாலைதீவு கலாச்சார மையத்தை நிறுவுதல் ஆகிய துறைகளில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தமானது நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்ட நிலையில் மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கமான மற்றும் வலுவான கலாசார உறவுகளை வளர்ப்பதற்கும் அபிவிருத்திசெய்வதற்கே திட்டமிடப்பட்டுள்ளது.

இது பாரம்பரிய பாது காப்பு மற்றும் தொல்லியல் துறை கல்வி ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் என கருதப்படுகின்றது.

மாலை தீவின் கலை, கலாசாரம் மற்றும் மரபுரிமைகளுக்கான இராஜாங்க அமைச்சர் மொஹமட் தோரிக் மற்றும் இலங்கையின் புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமதன விதான பத்திரன ஆகியோர் கலாசார ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். (4)


# சேவை நலன் பாராட்டு...




**பதுமநிதி சதானந்தன்**

(பகுதித் தலைவர்) (SLTS-I)

எமது பாடசாலையில் (29 வருடங்கள்) அளப்பரிய சேவையாற்றி இன்று 09.06.2023 ஓய்வு பெறும் ஆசிரியை **திருமதி.பதுமநிதி சதானந்தன்** அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| நுவ/ பரிசுத்த திரித்துவக் கல்லூரி | -27.12.1984 -01.02.1987 |
| யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | -02.02.1987- 31.12.1988 |
| நுவ/ பரிசுத்த திரித்துவக் கல்லூரி | -01.01.1989 - 30.04.1989 |
| நுவ/ சென்ஜோன்ஸ் டிலரி தமிழ் வித்தியாலயம் | -01.05.1989-31.01.1991 |
| யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | -01.02.1991-03.01.2014 |
| யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் | -04.01.2014-05.09.2017 |
| யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் | -06.09.2017-09.06.2023 |

**(மொத்த சேவைக்காலம் 39 வருடங்கள்)**

வாழ்த்துவோர்– அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

(15874)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரக்கு ரயிலில் சிக்கி ஏழு பேர் உயிரிழப்பு

## ஒடிசாவில் மீண்டும் சோகம்

(ஒடிசா)

ஒடிசாவில் உள்ள ஜாஜ்பூர் சாலை ரயில் நிலையத்தில் சரக்கு ரயில் ஏறியதில் 7 தொழிலாளர்கள் உயிரிழந்தனர் மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளனர்.

ஒடிசாவில் உள்ள ஜாஜ்பூர் கியோஞ்சர் சாலை ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இந்த சம்பவம் நடந்துள்ளது. இறந்த 7 பேரும் மழையில் நனையாமல் இருக்க ரயிலுக்கு அடியில் தஞ்சம் புகுந்த தொழிலாளர்கள்.

அவர்கள் கீழே இருப்பது தெரியாமல் ரயில் திடீரென முன்னோக்கி நகர்ந்தது. பின்னர் அவர்கள் வெளியேற முயன்றபோது விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்ததாகவும், நான்கு பேர் பலத்த காயமடைந்ததா கவும் ஜாஜ்பூர் மாவட்ட ஆட்சியர் கூறினார்.


காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், மேலும் மூன்று பேர் இறந்துவிட்டதாகவும் ஒருவர் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் பின்னர் தெரிவித்தார்.

உயிரிழந்த 7 பேரும் ரயில் பாதையில் பணிபுரியும் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சில நாட்களுக்கு முன்பு, ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் ரயில் விபத்தில் 280 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# உலகின் ஆழமான ஹோட்டல்

## பிரித்தானியாவில் திறந்து வைப்பு



(லண்டன்)

பிரித்தானியாவில் நிலத்தடி சுரங்கத்தில் விருந்தினர்கள் தூங்க அனுமதிக்கும் "உலகின் ஆழமான ஹோட்டல்" திறக்கப்பட்டுள்ளது.

விக்டோரியன் சுரங்கத்தின் அடிப்பகுதியில், 400 மீற்றர் நிலத்தடியில் தூங்குவதற்கு மக்களை அனுமதிக்கும் புதிய ஹோட்டல் பிரித்தானியாவில் திறக்கப்பட்டுள்ளது.

"உலகின் ஆழமான ஹோட்டல்" என்று அழைக்கப்படும், டீப் ஸ்லீப் ஹோட்டல் வடக்கு வேல்ஸில் Eryri தேசிய பூங்கா என்றும் அழைக்கப்படும் Snowdonia மலைகளுக்கு அடியில் அமைந்துள்ளது.

டீப் ஸ்லீப் ஹோட்டலில் நான்கு தனியார் இரட்டை படுக்கை அறைகள் மற்றும் இரட்டை படுக்கையுடன் கூடிய குகை உள்ளது. இது வாரத்தில் ஒரு நாள், சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை வாடகைக்கு எடுக்க முடியும்.

இங்கு அனைத்து வகையான உணவுகளும் பானங்களும் வழங்கப்படும். ஒரு தனியார் கேபினில் இருவர் தங்குவதற்கு ஒரே இரவில் 350 பவுண்டுகள் ஆகும். (4)

# சிரிக்க மறந்த ஜப்பானியர்களுக்கு சிரிக்க கற்றுக் கொடுக்கும் வகுப்புகள்

(டோக்கியோ)

உலகளவில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொரோனா தொற்று உச்ச கட்டத்தை எட்டி லட்சக் கணக்கான உயிர்களை காவு வாங்கியது. இதனால், மக்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

இதன் தாக்கத்தால் ஜப்பானியர்கள் சிரிக்கவே மறந்து விட்டார்கள் என்று கூறப்படுகிறது. கொரோனா தொற்றால் ஏற்பட்ட தாக்கம் மட்டுமல்லாமல், கொரோனா பரவாமல் இருக்க அவர்கள் கடைபிடித்த மாஸ்க் அணியும் பழக்கம் தான் முதல் காரணம் என்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ச்சியாக மாஸ்க் அணிந்து அவர்கள் சிரிக்கவே மறந்து விட்டார்களாம்.

ஜப்பானிய அரசு கொரோனா தொற்றுக் கட்டுப்பாடு விதியில் இருந்து மாஸ்க் அணிவதற்கு விலக்கு அளித்த போதும், இன்னமும் பலர் மாஸ்க் அணிந்துதான் வெளியே செல்கிறார்கள்.

அங்கு 8 சதவீத மக்கள் மட்டுமே மாஸ்க் அணிவதை நிறுத்தியுள்ளதாக கடந்த பிப்ரவரி மாதம் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இந்நிலையில், டோக்கியோவில் உள்ள கலைகல்வி நிறுவனம் ஒன்று சிரிக்க மறந்த ஜப்பானிய மக்களுக்கு சிரிக்க கற்றுக் கொடுக்கும் வகுப்புகளை எடுத்து வருகிறது.

முன்னாள் ரேடியோ தொகுப்பாளர் கெய்கோ கவானோ இந்த வகுப்பை எடுத்து வருகிறார். இந்த வகுப்பிற்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ. 4,550 செலுத்தி ஜப்பானிய மக்கள் பலர் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

அவர்களுக்கு சிரிப்பின் முக்கியத்துவம் பற்றியும், எப்படி சிரிக்க வேண்டும் என்றும், சொல்லி கொடுக்கப்படுகிறது. கையில் கண்ணாடி ஒன்றை வைத்துக் கொண்டு அவர்கள் சிரிக்க பயிற்சி எடுக்கும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது. (நி)

# ஆப்கானில் மினிபஸ் கவிழ்ந்து விபத்து; 9 குழந்தைகள் உட்பட 25 பேர் பலி



(காபூல்)

வடக்கு ஆப்கானிஸ்தானில் மினி பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒன்பது குழந்தைகள் மற்றும் 12 பெண்கள் உட்பட 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

திருமண நிகழ்ச்சிஒன்றில் கலந்துக் கொண்டு விட்டு திரும்பிய வேளை பள்ளத்தில் கவிழ்ந்து பயங்கர விபத்துக்குள்ளானது. (நி)

# கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக புகையில் மூழ்கிய நீயூயோர்க் நகரம்



(நியூயோர்க்)

கனடா காட்டுத்தீ காரணமாக நியூயோர்க் நகர் முழுக்க மஞ்சள் நிற புகை மூட்டம் ஏற்பட்டது. காட்டுத்தீ காரணமாக அமெரிக்காவின் கிழக்கு கடற்கரை பகுதிகளில் மிக மோசமான காற்று மாசு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டுத்தீ காரணமாக கன டாவில் ஆயிரக்கணக்கானோர் தங்களது வீட்டை விட்டுவெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மஞ்சள் நிற புகைமூட்டம் மேன்ஹேட்டன் நகரின் வானுயர்ந்த கட்டடங்களை மூழ்கடிக்க செய்திருக்கிறது. இதன் காரணமாக காற்று மாசு ஏற்பட்டதோடு, விமானங்கள் காலதாமதமாக கிளம்பி சென்றன.

மேலும் விளையாட்டு நிகழ்வுகள் தாமதமாக துவங்கப்பட்டன. காட்டுத்தீ காரணமாக அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் இருந்து சிகாகோவின் மேற்கு பகுதி மற்றும் தெற்கு அட்லாண்டா வரை பாதிப்பை ஏற்படுத்தியது. கனடாவில் இந்த காட்டுத்தீ காரணமாக சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காட்டுத்தீயில் சுமார் 3.8 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலப்பரப்பு முழுக்க தீயில் கருகின. கனடா வரலாற்றிலேயே மிக மோசமான காட்டுத்தீ இது என அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

1960 களில் இருந்து இதுவரை ஏற்பட்டதிலேயே மிகவும் மோசமான காற்று மாசு இது என நியூயோர்க் நகர சுகாதாரத் துறை ஆணையர் அஸ்வின் வாசன் தெரிவித்துள்ளார். இந்த நிலை, பல நாட்கள் வரை நீடிக்கும் என்றும், இது அவசரகால நெருக்கடி என்று நியூயோர்க் ஆளுநர் கேத்தி ஹோச்சுல் தெரிவித்தார். (நி)

# விசா இன்றி கனடா செல்ல 13 நாட்டவர்களுக்கு அனுமதி

(ஒட்டாவா)

13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், 6.6.2023 முதல் விசா இன்றி கனடாவுக்கு விமானம் மூலம் பயணம் செய்யலாம் என கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமைத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 13 நாடுகளைச் சேர்ந்த கடவுச்சீட்டுக்களை வைத்திருக்கும் பயணிகள், Temporary Residence Visa என்னும் தற்காலிக விசா இல்லாமலே கனடாவுக்கு பயணிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்றாலும், இந்த சலுகை, அந்த 13 நாடுகளைச் சேர்ந்தவர்கள், கடந்த 10 ஆண்டுகளில் கனடா விசா வைத்திருந்தவர்களாகவோ அல்லது தற்போது செல்லத்தக்க United States non-immigrant visa என்னும் அமெரிக்க தற்காலிக விசாவோ வைத்திருப்பவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களுக்குப் பொருந்தும் என்றொரு நிபந்தனை உள்ளதை மறுப்பதற்கில்லை.

அந்தவகையில் பிலிப்பைன்ஸ், மொராக்கோ, பனாமா, ஆன்டிகுவா மற்றும் பார்புடா, செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ், செயிண்ட் லூசியா, செயிண்ட் வின்சண்ட் மற்றும் கிரனடைன்ஸ், ட்ரினிடாட் மற்றும் டொபாகோ, அர்ஜெண்டினா, கோஸ்டாரிக்கா, உருகுவே, செஷல்ஸ், தாய்லாந்து ஆகிய நாட்டவர்களே இவ்வாறு பயணிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வாழ் பூஞ்சணம்: நோயாக்கி பூஞ்சண மற்றும் நெமற்றோட்டு எதிரி




**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாய உயிரியல்துறை**
**விவசாய பீடம்**
**யாழ். பல்கலைக்கழகம்**


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது எதிரிக்கு எதிரி எமக்கு நண்பன் என்பார்கள். இந்த மூத்தோர் வாக்கினூடாக விவசாயச் செய்கையில் குறிப்பாக பூச்சி பீடைகள் மற்றும் நெமற்றோட்டு புழுக்களை கட்டுப்படுத்தும் உயிர்க் காரணியான (Bioagent) மண்வாழ் பூஞ்சணம் (soil borne fungi) பற்றியதான விளக்கத்தையும் அதன் பயன்பாட்டையும் இக்கட்டுரை விளக்குகின்றது.

உயிரியல் காரணிகள் விவசாயிக்கும் விவசாயத்திற்கும் பல வழிகளில் நன்மை தருகின்றவையாகும். மண்ணில் வாழுகின்ற இப்பூஞ்சணமானது தாவரங்களில் நோயை உருவாக்குகின்ற (Disease causing) தீமைதரும் பூஞ்சணங்களின் பெருக்கத்தையும் அதனது இருக்கையையும் தொற்று ஏற்படுத்தி அழிக்கும் வல்லமையுள்ளது.

விவசாயச் செய்கையில் முனைப்பு காட்டும் விவசாய பெருமக்களுக்கும் விவசாய பண்ணைகளை உருவாக்கும் தொழில் வல்லுநர்களுக்கும் இப்பூஞ்சணம் பற்றிய அறிவு இருந்தால் இதனை உற்பத்தி செய்து இலகுவாகப் பயன்படுத்தலாம்.


வருமுன் காப்போம் (Prevent before causing) என்பது பீடை முகாமைத்துவத்தில் மிகவும் முக்கியமான தொனிப்பொருளாகும். இந்த சிறந்த செய்கையை (Good practice) கவனத்திற் கொண்டு விவசாய செய்கையில் முன்கூட்டிய தயார்ப்படுத்தலில் ஈடுபடலாம்.

ஆரம்ப பயிர்களின் வளர்ச்சியில் அவற்றினது தாவர வேர்களில் நோயுருவாக்கம் என்பது அத்திபாரத்தில் பழுது ஏற்படுவது என்பதற்கு சமனாகும். அத்திபாரம் ஆட்டம் கண்டால் எந்த கட்டடமும் நிலைத்து நிற்காது. அதுபோல பயிர்கள் வளரும் ஆரம்ப காலத்தில் குறிப்பாக நாற்றுக் காலப் பகுதியில் குறிப்பாக விதையிலிருந்து எழுந்து பூக்கின்றதான காலப்பகுதி வரை பயிர்கள் செழிப்பாக நோயின்றி வளருவதனை நாம் உறுதி செய்து கொள்வது அவசியம்.

இந்த நன்மை தரும் பூஞ்சணத்தை "ரைக்கோடேர்மா "(Trichoderma) எனப் பெயரிட்டு உயிரியல் கட்டுப்பாட்டுக்கு பயன்படுத்துவர்.

எமது மண்ணில் வாழும் நன்மை தரும் பூஞ்சணமான ரைக்கோடேர்மா பல விதங்களில் மண்ணில் குறிப்பாக வேர்களில் நோயை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



ஏற்படுத்தும் நோயாக்கி பூஞ்சணங்களையும் தாவரங்களின் வேர்களில் முடிச்சுக்களை (root galls) உருவாக்கி பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் நெமற்றோட்டுக்களையும் (Nematodes) விரைந்து கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது.

விவசாய பெருமக்களால் ஆகக்குறைந்த ஆய்வுகூட வசதியுடன் நுண்ணங்கியியல் பற்றிய அடிப்படை அறிவுடன் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இவ்வாறான நன்மை தரும் பூஞ்சணத்தை உற்ப்த்தி செய்து பயன்படுத்துவதன் மூலம் நோய்த் தாக்கங்களிலிருந்து பயிர் வகைகளை முன்னோடியாக காப்பாற்றுவதுடன் அவற்றின் செழிப்பான வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் நிலைமையை மண்ணில் உருவாக்கி விட முடியும்.

### ரைக்கோடேர்மாவின் தன்மை

இதுவொரு நன்மை தருகின்ற பூஞ்சணமாக இருக்கின்ற போதிலும் ஏனைய பூஞ்சணங்களைப் போலல்லாது தாவரங்களில் நோயாக்கும் பூஞ்சணங்களை பல வழிகளில் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது.

இயற்கையாக எமது மண்ணில் காணப்படுவதனால் இதனை இனம்பெருக்கி விவசாய செய்கையில் பயன்படுத்துவதற்கு எந்தவித பிரச்சினையும் இல்லை.

இதனது உற்பத்தியின் வீரியத்தன்மை மிகவும் அதிகமாக இருப்பதனால் இப்பூஞ்சணத்தை ஆய்வுகூடங்களில் வளர்க்கின்ற போது அதிகளவு சிரத்தை எடுத்துக் கொள்ளவும் தேவையில்லை. இப்பூஞ்சணம் நோயாக்கி பூஞ்சணங்களில் ஒட்டுண்ணியாக (Parasitic) வாழ்ந்து அதனை அழிக்கக்கூடிய சிறப்பினைக் கொண்டிருப்பது இதனது முதலாவது சிறப்பியல்பாகும். இதனையே ஆரம்பத்தில் எதிரிக்கு எதிரி எமக்கு நண்பன் எனக் குறிப்பிட்டேன்.

மேலும் இப்பூஞ்சணத்தினால் சுரக்கப்படும் ஒரு வகையான நோயெதிரி சுரப்பு (antibiotics) தாவர நோயாக்கி பூஞ்சணங்களின் விருத்தியை கட்டுப்படுத்தும் இயல்புடையது. இது இப்பூஞ்சணத்தினது இரண்டாவது சிறப்பு.

மூன்றாவதாக நோயாக்கி பூஞ்சணங்களுடன் போட்டி போட்டு (Competitive) சத்துக்களை அகத்துறுஞ்சும் தன்மையுடையதானால் இப்பூஞ்சணம் குறைந்த காலத்தில் விரைந்து பெருகும் தன்மையுடையாகின்றது.

### ரைக்கோடேர்மாவின் செயற்படுதிறன்

அழுகல் வளரியாக மண்ணில் வளரும் இப்பூஞ்சணத்தின் விசேட இயல்பாக நோயாக்கி பூஞ்சணங்களினை கட்டுப்படுத்தும் இயல்பு பெரிதும் வரவேற்கத்தக்கதும் அதிகளவில் பயன்படுத்தப் படுதலுமாகும்.

இப்பூஞ்சணம் இலிங்கமில் இனப்பெருக்கத்தில் அதிகளவிலான வித்திகளை உருவாக்கும் காரணத்தினால் இப்பூஞ்சண வித்திகளே அப்பூஞ்சண கரைசலின் செயற்படுதிறனை நிர்ணயிக்கும் தன்மையுடையதாகின்றது. இதுதவிர அநேகமான பூஞ்சணங்களின் இயல்புகளைப்போல பூஞ்சண சிற்றிழைகளும் புதிதான பூஞ்சணத்தை உருவாக்கும் தன்மையுடையதனால் வித்திகளையும் சிறிய பூஞ்சண இழைகளையும் ஒன்றிணைத்தும் பூஞ்சணத்தை வளர்த்துக் கொள்ளலாம்.

### ரைக்கோடேர்மாவின் பயன்பாடு

இப்பூஞ்சணத்தை அதிகளவில் விதை நேர்த்தி மற்றும் நாற்றுகளின் நேர்த்திக்காக பயன்படுத்தப்படுவதுண்டு. பொதுவாக விவசாயப் பெருமக்கள், தற்காக கப்ரான் மற்றும் திராம் எனப்படும் அசேதன பூஞ்சண நாசினியையே பயன்படுத்துவதுண்டு.

ஆனாலும் இயற்கையாக காணப்படும் இலகுவில் வளர்க்கப்படும் இத்தகைய பூஞ்சண எதிரியை பாரியளவில் வளர்த்து பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதனால் மண்ணில் வாழும் தாவர நோயாக்கிகளைக் கட்டுப்படுத்துவதோடு தாவரங்களின் வேர்களுக்கும் காப்பரணாக நன்மை தரும் நுண்ணங்கிகளின் பெருக்கத்தினை ஊக்குவிக்கலாம்.

தாவர வேர்களுக்கு நன்மை தரும் நுண்ணங்கிகளின் உதவி தேவை. அதன் மூலம் தாவரங்கள் தமக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை இலகுவில் அகத்துறிஞ்ச ஏதுவாகின்றது. மேலும் இப்பூஞ்சண கரைசலை பயிரின் வேர்த் தொகுதிக்கு இடுவதன் (Drenching) மூலமும் வேர்த்தொகுதியில் சுகாதாரத்தை பேணிக்காக்க முடியும்.

காளான் வளர்க்கும் செயன்முறைபோன்ற நடைமுறையில் இப்பூஞ்சணத்தை உள்ளூர் மூலப்பொருட்களை அடிப்படையாக வைத்து உருவாக்கும் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளதால் எங்களூரிலேயே இதனை வளர்த்து விவசாயச் செய்கையில் இதனைப் பயன்படுத்த முடியும்.

தாவர நோயாக்கிகளையும் நெமற்றோட்டுகளையுகும் கட்டுப்படுத்தும் இப்பூஞ்சணத்தின் பயன்பாட்டை பயிர்ச்செய்கையில் செயற்படுத்தி வளமான பயிர்ச்செய்கையை நாம் பெற்றிட முடியும். இயற்கை வழி விவசாயத்திற்கான இடுபொருளாக இவ்வாறான நன்மை தரும் இயற்கை எதிரிகளை பயன்படுவதால் பயிர்களின் விளைச்சலும் கூடி அதிக இலாபம் பெறுவதற்கும் வழிகளுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைத்துவ குடும்பங்களால் மன்னாரில் கச்சான் செய்கை

## அறுவடையும் வெற்றிகரமான முன்னெடுப்பு



(மன்னார்)


மன்னார் மாவட்டத்தில் கச்சான் கடலை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் '30 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு விதை கச்சான் 20 கிலோ வழங்கி வைக்கப்பட்டது. மெசிடோ நிறுவனம் வைற்றல் திட்ட நிதி அனுசரணையுடன், குறித்த குடும்பங்களுக்கு கச்சான் உற்பத்தியை மேற்கொள்ள உதவிகளை வழங்கி வைத்துள்ளனர்.

அதன் அடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பரப்புக் கடந்தான் மேற்கு கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கும் கச்சான் செய்கை யை மேற்கொள்ள 20 கிலோ விதை கச்சான் வழுங்கப்பட்டது.

குறித்த் பெண் தலைமைத்துவ குடும்பத்தைச் சேர்ந்த பத்மினி என்ற பெண் கச்சான் பயிரிட்டு தற்போது கச்சான் அறுவடையை நேற்று மேற்கொண்டுள்ளார்.

20 கிலோ கச்சன் விதைத்து தற்போது 200 கிலோ பச்சை கச்சானை அறுவடை செய்ய உள்ளதாக தெரிவித்தார். (4-285)

# பெருந்தொகை கோடாவுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது



(தருமபுரம்)

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுடலை குளம் பகுதியில் இராமநாதபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலை அடுத்து நேற்று முன் தினம் இரவு சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் கசிப்பு உற்பத்தி செய்வதற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 3780 லீற்றர் கோடாவை கைப்பற்றியதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இராமநாதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பண்டார தெரிவித்தார். (4-316)

# இயற்கை உர தொழிற்சாலை முல்லையில் திறந்து வைப்பு




(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட உடையார்கட்டு மூங்கிலாறு பகுதியில் உடையார்கட்டு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தினால் இயற்கை உர தொழிற்சாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திருமதி தேவந்தினி பாபு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.சிவகுமார், மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று போராட்டம்




(நெளுக்குளம்)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்றுடன் 2300 ஆவது நாட்களாக வவுனியாவில் சுழற்சி முறையிலான போராட்டத்தினை மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் போராட்ட பந்தலிற்கு முன்பாக குறித்த போராட்டமானது இடம்பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் படங்களினை ஏந்தியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை ஏந்தியவாறும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தீர்வு கிடைக்கும் வரை இவ் சுழற்சிமுறையிலான உண்ணாவிரத போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் தெரிவித்திருந்தனர். (4-299)

# விடுவிக்கப்பட வேண்டிய நிலையில் கிளிநொச்சியில் 7000 ஏக்கர் காணி

## மாவட்ட செயலகம் தகவல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்செய்கை அபிவிருத்தி முதலீடு மற்றும் மேய்ச்சல் தரவை ஆகிய தேவைகளுக்காக 5473.84 ஏக்கர் காணிகளை வனவளத் திணைக்களத்திடமிருந்தும் 1587 ஏக்கர் காணிகளை வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்தும் விடுவிக்க வேண்டிய தேவை காணப்படுவதாக மாவட்ட செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி கண்டாவளை பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் மற்றும் விவசாய நிலங்கள் மக்களின் குடியிருப்பு காணிகள் விடுவிக்கப்படாமல் காணப்படுகின்றன.

இந்த நிலையில் வன வளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதுதொடர்பிலான கலந்துரையாடல்கள் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (4-315)

## கடந்த 5 மாதங்களில்

# போதைப் பொருட்களுடன் கிளிநொச்சியில் 321 பேர் கைது



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஐந்து மாதங்களில் 36. 227 கிலோகிராம் கஞ்சா 251.178 கிலோகிராம் கெரோயின் 5.082 கிலோகிராம் ஐஸ் போதை பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் 321 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு 329 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அதிகரித்த போதைப் பொருள் பாவனை காணப் படுவதாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதனை தடுக்கும் வகையில் பொலிஸாரால் விசேட சுற்றி வளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு போதைப் பொருட்கள் மீட்கப்பட்டு வருவதுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றனர். (4-315)

# 744 சுற்றுலாப் பயணிகளுடன் இலங்கை வந்த கப்பல்

(கொழும்பு)

இந்திய சுற்றுலா பயணிகள் 744 பேருடன் உலகம் முழுவதும் பயணம் செய்து வரும் பஹாமாஸ் அரசுக்கு சொந்தமான இம்பிரஸ் என்ற கப்பல் நேற்றுக் காலை திருகோணமலை துறைமுகத்தில் உள்ள அஷ்ரஃப் துறையில் நிறுத்தப்பட்டது.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து இலங்கை வந்திறங்கிய இந்த சுற்றுலாப் பயணிகள் தம்புள்ளை, சிகிரியா, திருகோணமலை போன்ற இடங்களுக்குச் செல்லவுள்ளனர்.

அதன் பின்னர், இந்தக் கப்பல் இந்தியாவின் சென்னை துறைமுகத்துக் குப் புறப்படும் என்று துறைமுக அதிகார சபையின் வதிவிட முகாமையாளர் சமன் பெரேரா தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரீம்கள் மற்றும் லோஷன்களில் பாதரசத்தின் அளவு மிக அதிகம்

## உறுதிப்படுத்திய கைத்தொழில் தொழில்நுட்ப அறிக்கைகள்

(கொழும்பு)

**பெண்களை வெள்ளையாக்க பயன்படுத்தப்படும் கிரீம்கள் மற்றும் லோஷன்களில் இருக்க வேண்டிய பாதரசத்தின் அளவு அங்கீகரிக்கப்பட்ட வரம்பை விட அதிகமாக இருப்பதாக இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவன அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.**

இது தொடர்பில் கொழும்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபை பிரிவின் சிரேஷ்ட புலனாய்வு அதிகாரி ஈ. யு. ரஞ்சனா தெரிவிக்கையில்,

கடந்த வாரம் நுகர்வோர் அதிகாரசபையின் விசேட அதிரடி சோதனைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளரின் விபரங்கள் இன்றி சட்டவிரோத லோஷன்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் 7 வகையான உடல் கிரீம்கள் மற்றும் லோஷன்களில் 6 வகையான பாதரசத்தின் அளவு ஒரு கிலோவிற்கு 8.1 மில்லிகிராமிலிருந்து 31.540 மில்லிகிராம் வரை மிக அதிகமாக இருந்ததாக இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆய்வுக் கூடம் அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தையில் அதிகளவில் விற்பனையாகும் உடலை வெண்மையாக்கும் கிரீம்களில் பாதரசம் அதிகம் உள்ளதாகவும், புற்றுநோய் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், ஒவ்வொரு உறுப்புக்கும் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான கிரீம்கள் மற்றும் திரவங்களை கொள்வனவு செய்யும்போது, குறிப்பாக இறக்குமதியாளரின் பெயர் மற்றும் முகவரி இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படுமாயின் அங்கு பெயர் மற்றும் முகவரி எழுதப்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# வெகு விரைவில் மீண்டும் வரிசை யுகம் தோன்றும்

## எச்சரிக்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

பொருளாதார பாதிப்புக்கு தற்காலிக இடைவேளை மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் வரிசையுகம் மீண்டும் தோற்றம் பெறும். கடன் மறுசீரமைப்பின் தாக்கம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்கு பின்னரே வெளிப்படும். ஆகவே அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுவது கட்டாயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

எதிர் வரும் செப்டெம்பர் மாதம் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உறுதியாக திட்டத்தை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். தற்போது தேசிய கடன் செலுத்தப்படுகிறது. வெளிநாட்டு கடன்கள் செலுத்தப்படுவதில்லை.

கடன் மறுசீரமைப்புக்களின் பின்னர் வட்டியுடன் வெளிநாட்டு கடன்களை நிச்சயம் செலுத்த நேரிடும். 2024 ஆம் ஆண்டு கடன் மறுசீரமைப்புடன் தோற்றம் பெறும் மாறுப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் போது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் வங்கி வைப்பாளர்கள் பாதிக்கப்படுவார்கள். உழைக்கும் மக்களின் மீது பொருளாதார பாதிப்பின் சுமை திணிக்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் வங்கி கடன் வட்டி வீதம் அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் மிகுதியாகவுள்ள தொழில் முயற்சியாளர்களை பாதுகாக்க அரசாங்கம் பொறுப்புடன் துரிதமாக செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# அநுரகுமார உள்ளிட்ட 26 பேருக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போடப்பட்டமைக்கு எதிராக தேசியமக்கள் சக்தி நேற்று நடத்த திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்ட பேரணிக்கு தடை விதித்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 26 பேருக்கு எதிராக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

வெலிக்கடை பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி)



# கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த மே மாதத்தில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 26.2% அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த மே மாதம் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்கள் 3,483 மில்லியன் (3.5 பில்லியன்) அமெரிக்க டொலர்களாக பதிவானதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஏப்ரலில் இந்நாட்டின் அதிகாரப்பூர்வ கையிருப்பு 2.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. சீனா வழங்கிய 1.4 பில்லியன் நிதி வசதியும் இதில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஹிக்கடுவை கடலில் மூழ்கி ரஷ்யப் பிரஜை உயிரிழப்பு

(கொழும்பு)

கடலில் நீராடச் சென்ற ரஷ்யப் பிரஜையொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஹிக்கடுவை கடலில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை நீராடச் சென்ற 29 வயதான ரஷ்யப் பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடலில் இருந்து மீட்கப்பட்ட குறித்த ரஷ்யப் பிரஜை காலி, கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# புத்தளத்தில் திடீரென உயிரிழந்த காகங்கள்



(புத்தளம்)

புத்தளம் நெடுங்குளம் வீதியின் குடியிருப்பு பகுதியில் சுமார் 50 இற்கும் அதிகமான காகங்கள் உயிரிழந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பிரதேச மிருக வைத்திய உத்தியோகத்தர் மற்றும் அலுவலக அதிகாரிகளுக்கு தகவல் அப்பகுதி மக்கள் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு அதிகாரிகள் வருகைத் தந்து உயிரிழந்த காகங்களை பார்வையிட்டுள்ளனர்.

குறித்த காகங்கள் உயிரிழந்தமைக்கான காரணத்தை கண்டறிவதற்காக உயிரிழந்த காகத்தின் மாதிரிகளை பகுப்பாய்விற்காக பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்காக கொண்டு சென்றுள்ளனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள். | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 150 | 300 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 250 | 340 | 350 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 250 |
| கோவா | 350 | 400 | 450 | 400 |
| கரட் | 400 | 400 | 420 | 450 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 240 | 220 | 200 | 400 |
| வாழைக்காய் | 140 | 140 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 | 150 |
| பாகற்காய் | 500 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 180 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 240 | 240 | 150 | 200 |
| பயற்றங்காய் | 450 | 600 | 250 | 300 |
| லீக்ஸ் | 380 | 380 | 420 | 450 |
| பீற்றூட் | 400 | 500 | 300 | 500 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | — | 800 | 2400 |
| போஞ்சி | 500 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 300 | 120 |
| கீரை – 1 பிடி | 80 | 50 | 100 | 60 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 600 | 800 |
| முள்ளங்கி | 180 | 220 | -- | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 140 | 40 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | 200 | -- | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








“திருமலை! அதெல்லாம் எப்படியாவது இருக்கட்டும். என்னிடம் குந்தவை ஏதேனும் ஒன்றைச் சொல்லவில்லையென்றால், அதற்குத் தக்க காரணம் இருக்கும். அவளிடம் சந்தேகப்படுவதைக் காட்டிலும் என் பிராணனையே விட்டு விடுவேன்!” என்றார் சிவஞான கண்டராதித்தரின் பட்ட மகிஷி.

“ஐயையோ! அப்படி ஒன்றும் நேர வேண்டாம். தங்களுடைய நம்பிக்கையே மெய்யாகட்டும். இளவரசி என்னிடம் ஏதோ கேட்பதற்காக வரச் சொல்லியிருக்கிறார். தாங்கள் பார்க்க விரும்புவதாக நானே தெரிவித்துவிடுகிறேன்” என்றான். ஆழ்வார்க்கடியான்

### நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்
### குற்றம் செய்த ஒற்றன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கரிகால் பெருவளத்தான் என்னும் சோழ மன்னன் காவேரி நதிக்கு இருபுறமும் கரை எடுத்தான். வெகு காலம் அந்தக் கரைகள் நல்ல நிலைமையில் இருந்து காவேரி ஆற்றைக் கட்டுக்குள் வைத்திருந்தன. பின்னர், சோழ குலத்தின் வலி குறைந்தது. பாண்டியர்களும் பல்லவர்களும் களப்பாளரும் வாணரும் தலையெடுத்தார்கள். இந்தக் காலத்தில் காவலன் இல்லாத காவேரி நதி அடிக்கடி கட்டு மீறிக் கரையை உடைத்துக் கொண்டது.

இவ்விதம் பெரிய அளவில் கரை உடைந்த சில சந்தர்ப்பங்களில் நதியின் போக்கே மேலும் கீழுமாக மாறுவதுண்டு. பழங்காவேரி புதுக் காவேரியாகும் அடியோடு நதியின் கதி மாறிப் போய் விட்டால், பழைய நதிப்படுகை சில சமயம் நன்செய் நிலமாக மாறும் வேறு சில சமயங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் ஓடைகளாகிக் கடல் போல் அலைமோதிக் கொண்டிருக்கும்.

பழையாறு நகரின் சோழ மாளிகைகளையொட்டித் தென்புறத்தில் அத்தகைய ஓடை ஒன்று இருந்தது.

காவேரியின் கதி மாறியதால் ஏற்பட்ட இந்த ஓடையைச் சோழ மன்னர்கள் வேண்டுமென்றே ஆழமாக்கி, விசாலப்படுத்தி, எப்போதும் தண்ணீர் ததும்பி நிற்கும்படிச் செய்திருந்தார்கள். அரண்மனைக்கும், முக்கியமாக அந்தப்புரங்களுக்கும் இந்த விசாலமான நீர் ஓடை ஒரு நல்ல பாதுகாப்பாக இருந்தது. அந்த வழியில் யாரும் எளிதில் வந்து விட முடியாது. அரண்மனையோடு நெருங்கிய தொடர்புள்ளவர்கள் தான் படகில் ஏறி வரலாம்.

அரண்மனை அந்தப்புரங்களின் அழகிய உத்தியான வனங்கள் இந்த நீரோடையை ஒட்டி அமைந்திருந்தன. அரண்மனை மாதர்கள் நிர்ப்பயமாக அந்த உத்தியான வனங்களில் எந்த நேரமும் உலாவுவார்கள். கூடிக் குலாவுவார்கள் மயில்களாகி ஆடுவார்கள் குயில்களாகிப் பாடுவார்கள். சில சமயம் ஓடையில் இறங்கி நீராடுவார்கள். ஓடையில் ஓடம் ஓட்டியும் விளையாடுவார்கள்.

சோழர் குலத்தில் ஓர் அரசர் காலமாகி இன்னொருவர் பட்டத்துக்கு வரும் போது புதிய அரண்மனை கட்டிக் கொள்வதுண்டு. பழைய அரண்மனையில் காலமான மன்னரின் ராணிகளும் மற்றப் பிள்ளைகளும் வசிப்பார்கள்.

பழையாறு அரண்மனைகளில் செம்பியன் மாதேவியின் அரண்மனைக்கு அடுத்தபடியாகக் குந்தவைப் பிராட்டியின் மாளிகை அழகிலும் கம்பீரத்திலும் சிறந்து விளங்கியது. அது சுந்தர சோழர் வசித்த அரண்மனை அல்லவா? அவர் தஞ்சை சென்ற பிறகு, குந்தவை அந்த அரண்மனையின் எஜமானியாக விளங்கினாள்.

அம்மாளிகையின் பின்புறத்து உத்தியானவனம் மிகச் சோபிதமாக விளங்


(தொடரும்)




## மூங்கில் காட்டில் தீ

(நேற்றைய தொடர்ச்சி..)

குரங்குகள் தங்கள் தரப்பு நியாயத்தைக் கூறின. மற்ற விலங்குகள் அவர்கள் தரப்பு ஆதங்கத்தை வெளியிட்டன. “சரி. நீங்கள் மட்டுமே இந்தக் காட்டில் வாழ்வதாக நினைத்துக் கொண்டு அட்டகாசம் செய்வது தவறு. அதை நீங்கள் ஒப்புக் கொள்ளாதது அதை விடப் பெருந்தவறு. அதனால் நீங்கள் வசிக்கும் அந்த மூங்கில் காட்டில் இனி எந்த விலங்கும் உள்ளே வராது.



நீங்களும் அதைத் தாண்டி வெளியே வரக் கூடாது. அந்தக் காட்டுக்கு நீங்களே ராஜா” என்றது சிங்கராஜா.

“ஓ” என்று மகிழ்ச்சியில் குரங்குகள் கத்தின. “அமைதி. நான் இன்னும் முழுவதுமாகச் சொல்லி முடிக்கவில்லை. அந்த மூங்கில் காடு மூன்று மாதம் வரை உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் தவறைப் புரிந்துகொண்டு, சரியாக நடந்து கொண்டால் முன்பு போல காட்டில் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம். இல்லை என்றால் அந்த மூங்கில் காட்டைத் தாண்டி வரக் கூடாது. சம்மதமா?” “சம்மதம்... சம்மதம்...” என்று மகிழ்ச்சியில் கத்தின குரங்குகள்.

“சரி. எல்லோரும் கிளம்பலாம்” என்று [illegible]லிவிட்டு, குகையை நோக்கிச் சென்றது சிங்கராஜா. மூங்கில் காட்டில் ஒரு வாரம் குரங்குகளின் ஆரவாரம்தான். “ஆஹா! நமக்கென்று ஒரு காடு. குரங்குகளே இந்தக் காட்டுக்கு ராஜா” என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தன. “நண்பர்களே, நீங்கள் நினைப்பது தவறு. எல்லோரும் இணைந்து வாழ்வதுதான் சிறந்த வாழ்க்கை .

நாம் இப்போது தண் [illegible] இது உங்களுக்குப் புரியவில்லையா?” என்று வருந்தியது வயதான குரங்கு.

“அட, தாத்தா பேச்சைச்சை விடுங்கப்பா! நாம மகிழ்ச்சிச்யைக் கொண்டாடலாம் வாங்கப்பா” என்றது ஓர் இளைய குரங்கு. குரங்குகளின் மகிழ்ச்சிச் ஒரு வாரம் கூட நீடிக்கவில்லை. மூங்கிலின் உராய்வால் காடு தீப்பற்றி எரிய ஆரம்பித்தது.

குரங்குகளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அருகில் குளம் இருந்தும், போது மான தண்ணீரைக் கொண்டு வந்து அணைக்க முடியவில்லை.

“நாம் இத்தனை பேர் இருந்தும் தீயை அணைக்க முடியவில்லையே” என்று வருந்தின.

“நாம் இப்பயே வேடிக்கை பார்த்துக் கொண்ருந்தால் இந்த மூங்கில் காடு அழிந்துவிடும் வாங்க சிங்கராஜாவிடம் மன்னிப்பு கேட்டு, தீயை அணைக்க ஏற்பாடு செய்யலாம்” என்றது வயதான குரங்கு. “ஆமாம், அதுதான் சரியான முடிவு. இல்லை என்றால் தீயில் நாம் பலியாகிவிடுவோம்” என்றது ஒரு குரங்கு.

அனைத்துக் குரங்குகளும் சிங்கராஜாவைச் சந்தித்தன. உடனே சிங்கராஜா யானைப் படைகளை அனுப்பியது. யானைகள் குளத்துத் நீரை உறிஞ்சி, தீயை அணைக்கும் பணியில் இறங்கின. இரண்டு மணி நேரப் போராட்டத்துக்குப் பிறகு தீ அணைக்கப்பட்ட் து.

“உங்கள் உதவி இல்லை என்றால் எங்கள் இனமும், மூங்கில் காடும் அழிந்துப் போயிருக்கும். அனைவருக்கும் நன்றி. இனி எங்களுக்குத் தனிக்காடு வேண்டாம். நாங்களும் உங்களுடன் இணைந்து வாழவே விரும்புகிறோம்” என்றன குரங்குகள். “தவறை உணர்ந்து விட்டீர்கள். இனி எல்லோரும் ஒற்றுமையாகவே வாழலாம்” என்றது சிங்கராஜா.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
– மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இராமபிரான் இல்லாத தசரதர் வீடு போல...

பாட்டுடைத் தலைவன் என்று நம் தமிழ் வியந்து போற்றுகின்ற சொற்பதம் மிகவும் உன்னதமானது.

உலகில் இருக்கக்கூடிய உன்னதமான தலைவர்களை, உலகில் இருக்கக்கூடிய அத்தனை மொழிகளும் எவ்வண்ணம் வியந்து போற்றினவோ அவை அத்தனைக்கும் ஈடான சொற்பதமே பாட்டுடைத் தலைவன் என்பதாகும்.

ஆக, காவியத் தலைவனை, இதிகாசம் போற்றுகின்ற அவதார புருசனை பாட்டுடைத் தலைவன் என்று நம் தமிழ் இனிதாகப் வெயரிட்டது.

அந்தவகையில், கம்பராமாயணத்தில் பாட்டுடைத் தலைவனாக இருக்கக்கூடியவன் இராமபிரான்.

ஒரு காப்பியத்தில் பாட்டுடைத் தலைவன் இல்லையாயின், அது காப்பியம் என்ற தகைமையை இழந்து வெறும் காகிதமாகிவிடும்.

எனினும் தசரதர் மனையில் இருந்த இருவர் அந்த உண்மையை உணர்ந்து கொள்ளவில்லை. அதில் ஒருவர் கைகேயி. மற்றவர் கூனி எனும் மந்தரை.

இங்கு பாட்டுடைத் தலைவனாகிய இராமனைக் காடேக வைத்து, பரதனை நாடாள வைப்பதற்குக் கைகேயியும் அவள் தோழியும் சூழ்ச்சி செய்கின்றனர்.

அந்தோ! இராமபிரான் காடேகின்றார். அவர் மனையாள் சீதாப்பிராட்டி இராமர் இருக்கும் இடமே அயோத்தி எனத் துணிந்து தன் நாயகனுடன் காடேகிறாள்.

தம்பி இலட்சுமணன் இராமரைப் பின் தொடர்கிறான்.

இராமரைக் காட்டுக்கு அனுப்பி விட்டால், அயோத்தி மாநகரில் தாம் மகிழ்வாக இருக்கலாம் என்று நினைத்த கைகேயி வெள்ளை ஆடை தரித்து வீட்டுக்குள் முடங்கிப் போகிறாள். கூனி பற்றிய தகவல்கள் ஏதுமில்லாமல் போயிற்று.

ஆம், தன் மகன் இராமன் காடேகினான் என்ற செய்தி அறிந்த தசரதர் தேகவியோகமடைந்தார்.

தன் தாயின் சூழ்ச்சியால், அண்ணன் இராமன் காடேகினான் என்ற செய்தியறிந்த பரதன் தன் தாயைப் பார்த்து; நீயும் ஒரு தாயா? எனக் கேட்டு நாவினால் சுடுகின்றான்.

முடிந்தது எல்லாம். மாமன்னன் தசரதன் மாண்டு போனான். பெற்ற பிள்ளை பரதன், தாயை ஓரங்கட்டினான். அவ்வளவுதான் அயோத்தி மாநகரின் சிம்மாசனத்தைப் பாதணிகள் தமதாக்கிக் கொண்டன. அண்ணன் இராமனை நினைந்து பரதன் வெந்துருகினான்.

இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் கைகேயி என்பதால், அவள் ஓரங்கட்டப்பட்டாள்.

இப்போது இராமர் இல்லாத தசரதரின் வீடு எல்லா நலனையும் இழந்து துன்பத்தை மட்டுமே சுமந்து நிற்கின்றது.

ஆக, இராமரைத் துரத்தி விட்டால், அயோத்தி மாநகர் மகிழ்வாக இருக்கும் என்று யார் கருதினாலும் அது மிகத் தவறான முடிவு.

அந்த முடிவு எத்துணை ஆபத்தானதென்பதை நம் தமிழ் அரசியலில் இருப்பவர்கள் நிச்சயம் கவ்ந்து கவனிக்க வேண்டும்.

ஏனெனில் நம் தமிழ் அரசியல் என்பது இராமர் இல்லாத தசரதர் வீடு போல் உள்ளது.

ஆகையால் இதில் வெட்டுக் கொத்துக்கள், அரசியல் சார்ந்த சுயலாபங்கள் என்பன தமிழ் இனத்துக்கு ஈனமாக அமையும் என்பதால், மிகவும் நிதானமாக நடக்க வேண்டிய காலமாக சமகாலம் இருப்பதை நம் தமிழ் அரசியல் தரப்புகள் நன்கு உணர்ந்து கொள்வது அவசியம்.

# பாராளுமன்ற உறுப்பினர் போன்று கஜேந்திரகுமார் செயற்படவில்லை

## பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார்

## – சபையில் அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடுமையான சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தி பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாக பொது மக்கள்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தச் சம்பவம் தொடர்பாக நான் அறிக்கையொன்றை கோரியிருந்தேன். அத்தோடு நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள காணொளிகளையும் நான் பார்வையிட்டேன்.

இந்த காணொளியைப் பார்க்கையில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் போன்று செயற்படவில்லை.

பொலிஸாரை ஒருமையில் பேசுவது மற்றும் கடுமையான சொற்பிரயோகங்களை அவர் பயன்படுத்தியுள்ளார். இது தொடர்பாக நான் பொலிஸாரிடம் முழுமையாக தகவல்களை பெற்றுக் கொண்டிருந்தேன்.

பரீட்சை மண்டபத்திற்கு அருகில் இவர்கள் கூட்டமாக இருப்பதாக அங்கு பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சிவில் உடையில் வந்த பொலிஸார் இந்தக் குழுவினரிடம், கேள்விகளை கேட்டுள்ளனர்.

முதல் தடவையாக பொலிஸார் தங்களை அடையாளம் காட்டாமல் இருந்திருக்கலாம். ஆனால், குறித்த காணொளிக் காட்சியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு பொலிஸாரின் பின்னால்சென்று, அவரின் ரீ-சேட்டை பிடித்து இழுக்கிறார்.

குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் கஜேந்திரகுமாரின் கையைத் தட்டிவிட்டு ஓடுகிறார்.

பின்னர், பரீட்சை மண்டபத்தின் வேலிக்கு அருகில் இருந்த பொலிஸாரிடம் சென்ற இவர், அவர்களை கடுமையான வார்த்தைகளால் பேசியுள்ளார்.

இது பொலிஸாரின் கடமைக்கு இழைக்கப்பட்ட இடையூறாகும்” என அமைச்சர் டிரான் அலஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஆஸியிலிருந்து வருகை தந்த 72 வயது நபரிடம் மோசடி

## கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயது யுவதி கைது

(வவுனியா)

அவுஸ்ரேலியாவில் இருந்து வந்த 72 வயது நபர் ஒருவரின் வங்கி அட்டையை மோசடி செய்ததாக 24 வயது யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் 72 வயது நபர் ஒருவர் கிளிநொச்சியில் வசித்து வந்த யுவதி ஒருவருடன் முகப்புத்தகத்தில் பழகி வந்த நிலையில், குறித்த நபர் அவுஸ்திரேலியாவில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயது யுவதியும் வவுனியாவிற்கு வருகை தந்து அவருடன் தங்கியுள்ளார்.

இருவரும் வவுனியாவில் உள்ள விடுதி ஒன்றிலும் குருமன்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றிலும் சில நாட்கள் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போது குறித்த யுவதி அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த நபரின் கடனட்டையை பயன்படுத்தி வவுனியா பசார் வீதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் நகை கொள்வனவு செய்துள்ளார்.

சிறிது நாட்களின் பின் குறித்த நபர் அவுஸ்திரேலியா செல்ல ஆயத்தமாகியபோது அந்த யுவதியை அழைத்தபோது அவர் கிளிநொச்சியில் இருந்து வரவில்லை.

இதனால் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், அவுஸ்திரேலியா சென்ற நபர் குறித்த யுவதி தனது வங்கி அட்டையைமோசடி செய்து நகைகளை கொள்வனவு செய்துள்ளதாக அவுஸ்திரேலியாவில் இருந்து வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து, கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயது யுவதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-250)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கந்தரோடை, மாகியப்பிட்டி சந்தை, மதவட, பெருமாள்கடவை, வைரவர் கோவில்-சண்டிலிப்பாய், சண்டிலிப்பாய், சங்குவேலி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், சமயபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரியகரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ் தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு செண்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds church - பேசாலை, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், பட்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

## யாழ்.தலைமைப் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில்நேற்று முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் நேற்று குறித்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முகநூலில் படம் ஒன்றை பதிவிட்டதற்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு தன்னை அழைத்து எச்சரித்ததுடன் அச்சுறுத்தும் வகையில் யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செயற்பட்டதாக முறைப்பாட்டாளர் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-33)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புலோலி வடகிழக்கு உத்திராவத்தை அருள் மிகு ஞானவைரவர்ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று9ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 7.26 - 8.24 மணி வரையுள்ள சுபவேளையில் இடம் பெற்று தொடர்ந்து 13 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

26

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆனால் பொலிஸ், இராணுவம் லஞ்சம் வாங்கிக் கொண்டு இரவில் பார்ட்டி போட அவர்கள் தங்களுடைய தொழிலை செய்து கொண்டே இருக்கின்றார்கள். எந்தவிதமான பொறுப்பு ஏதும் கிடையாது. இதனால் தான் இன்று கஞ்சாக்கடத்தல் இடம்பெறுகின்றது. இதை யார் கட்டுப்படுத்துவது.

இத்துறையில் இருக்கின்ற பிரச்சினைகளை பாராளுமன்றத்துக்கு செல்பவர்கள் கூட கதைப்பதாக தெரியவில்லை. இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை பேராசிரியர் கலாநிதி சூசை ஆனந்தன் "வட பகுதி கடற் றொழிலின் சமகால நிலவரங்கள்" தொடர்பில் ஆற்றிய உரையில் கூறப்பட்டிருந்தது.

### அழிக்கப்படும் பவளபாறைகள்பற்றி....

பவளம் எனும் சிறிய அங்கிகளே பவளப்பாறைகளை உருவாக்குகின்றன. முள்ளந்தண்டு அற்ற இந்த உயிரினத்தை பொலிப் என்று அழைப்பர். இந்தப் பொலிப் உயிரினங்கள் மென்மையான மற்றும் ஒளி ஊடுருவும் தன்மையுடைய ஒரு உயிரினமாகும். இவ்வாறான ஆயிரக்கணக்கான பொலிப் உயிரினங்கள் ஒன்றுசேர்வதாலேயே பவளப்பாறைகள் உருவாகின்றன.

இவை கடல் நீரி லிருந்து பெற்றுக்கொள்ளும் கல்சியமானது கல்சியம் கார்பனேற்றாக மாறுவதால் அவை கற்பாறைகள் மீது ஒட்டிக் கொள்வதால் பவளப் பாறைகளாக மாறுகின்றன உலகின் அனைத்து சமு த்திரங்களிலும் ப்வளப்பாறைகள் உருவாவதில்லை. இவை உரு வாவதற்கு விசேட சுற்றுச்சூழல் அவசியம் ஆகும். அவையாவன: சமுத்திரநீரின் வெப்பநிலை20 °C - 24 °C இற்குஇடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

சமுத்திர நீரின் ஈரப்பதம்30 சதவீதத்தில் இரு ந்து35 சதவீதம் வரை இருக்க வேண்டும். சூரிய ஒளி சமுத்தி ரத்தின் ஆழ்பகுதி வரை நன்கு ஊடுருவ வேண்டும். கடல்அலை குறைவாக இருக்க வேண்டும்.

பசுபிக் பெருங்கடல் மற்றும் பாக்கு நீரிணைப் பகுதியில் வண்ணங்களில் பவளப் பாறைகள் அமைந்துள்ளன. இவை பச்சை, கருஞ்சிவப்பு, பழுப்பு, மஞ்சள் முதலான நிறங்களில் காணப்படுகின்றன. இவை பல்வேறு கடல் உயிரினங்கள் வாழ்வதற்கான இடமாகவும் இருக்கின்றன. இவை 'கடல்களின் மழைக்காடுகள்' என அழைக்கப்படுகிறது.

இலங்கையில் கூடுதலான கடற்கரைப் பகுதிகளில் பவளப் பாறை வளம் காணப்படுகிறது. இலங்கை பவளப்பாறைகளின்வகைகள் பின்வருவனவாகும். (1) பவளப்பாறைகள், (2) மணற்கல் பவளப்பாறைகள்.(3) பளிங்குப்பாறைகளினால் உருவான பவளப் பாறைகள்.

இலங்கையில் பவளப் பாறைகள் காணப்படும் இடங்கள். (1) அம்பலாங்கொட, மாத்தறை கடற்கரைப்பகுதி. (2) தங்காலை, ரெகவ கடற்கரைப்பகுதி.(3) மகாராவண, சிறியராவணபகுதிகள். (4) மட்டக்களப்பு - பாசிக்குடா, கல்குடாப் பகுதிகள்.(5) மன்னார், கற்பிட்டிகடற்கரை. (6) யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெடுந்தீவுபகுதிகள்.(7) திருகோண மலைக் கடற்கரைப்பகுதிகள் - புறாத்தீவு, பவளப்பாறைத்தீவு. டச்பே(8) ஹிக் கடுவை கடற்கரைப் பகுதி என்பனவாகும்.

நான்காயிரத்திற்கு மேற்பட்ட கடல்வாழ் உயிரினங்கள் இந்த பவளப்பாறைகளை தமது வாழ்விடமாகவும் இனப்பெருக்கத்திற்கு உரிய இடமாகவும் பயன்படுத்தி வருகின்றன.

தமிழக மீனவர்கள் பாவிக்கும் சுருக்கு வலைகளால் வடபகுதி கடல் பிரதேசத்தில் இருக்கும் பவளப் பாறைகள் அழிக்கப்பட்டு வருகிறது. சுருக்கு வலைகள் நிலத்துக்கடியில் சென்று அனைத்தையும் வாரிக் கொண்டு வருவதால் பவளப்பாறைகளும் சிதைக்கப்படுகிறது.

இந்த சிதைவுகள் வடபகுதி கடற்கரை ஓரங்களில் கரை ஒதுங்கி இருப்பதை அண்மைக்காலத்தில் காண முடிகிறது.

பவளப் பாறைகள் பாதிக்கப்படுவதால்அவற்றைச் சார்ந்துவாழும் மீன்களும் பாதிக்கப்படுகின்றன. இவ்வகை மீன்பிடிப்பு முறைகளால் பவளப் பாறைகள் முற்றிலும் அழிந்து வருவதால் மீனினங்களும் அழியும்நிலையில் உள்ளன.

கடல் வளங்களை மேம்படுத்தவும் கடல் உயிரினங்களைக் காக்கவும் செயற்கை பவளப் பாறைகள் பயன் படுகின்றன. ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மீன்களைக் கவர்வதற்காகச் செயற்கை முறையில் பொருட்களை உருவாக்கிப் பயன்படுத்தி உள்ளனர்.

### செயற்கைப் பவளப் பாறைகளின் வரலாறு

உலகெங்கிலும் உள்ள கடல் நாடுகளிடையே செயற்கை நீர்வாழ் வாழ்விடங்கள் மீதான ஈர்ப்பு வேகமாக அதிகரித்து வருகிறது. ஆறு கண்டங்களில் உள்ள நாற்பது நாடுகளும் இப்போது மேம்பட்ட தொழில்நுட்பங்களை இதற்காகப் பயன்படுத்தி வருகின்றன. செயற்கை பவளப் பாறைகள் மற்றும் மீன் திரட்டும் சாதனங்கள் மூன்று நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஜப்பானில் வணிக நோக்கில் மீன் பிடிக்கவும், அமெரிக்காவில் பொழுது போக்கு நோக்கில் மீன் பிடிக்கவும், இந்தியா உள்ளிட்ட ஒருசில ஆசிய நாடுகளில் சிறியளவிலான மீன் பிடிப்புக்கும் பயன்படுத்தப்படுகின்றன. சரியான முறையில் உருவாக்கப்பட்ட பவளப் பாறைகள் குறுகிய காலத்தில் சிறந்த மீன்பிடித்தளங்களாக மாறுகின்றன. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வணிக நோக்கில் சூரைமீன்பிடித்தலில்மீன் திரட்டும் சாதனங்கள் திறம்படப் பயன்பட்டுள்ளன.

மீன்வளத்துக்கான செயற்கை மீன்வாழ்விடத் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் ஜப்பான் உலகத்தில் முன்னிலை வகிக்கிறது. அங்கே 17 ஆம் நூற்றாண்டில் ஒரு பாறையைக் கடலில் விட்டதன் மூலம் பழமையான செயற்கை பவளப் பாறைகள் உருவாக்கப்பட்டன. சிறப்புப் பொருளாதாரமண்டல் அறிவிப்புக்குப் பிறகு தொலைவிலுள்ள மீன்பிடி தளத்திலிருந்து மீன்உற்பத்தி தொடர்ச்சியாகக் குறையைத் தொடங்கியது.

செயற்கை பவளப் பாறைகள் மீன் உற்பத்தியைப் பெருக்குவதுடன் மீன் வளங்களைக் காப்பதற்கும் வழிவகை செய்கிறது. ஜப்பான் இப்போது மிகவும் தீவிரமான மற்றும் தொழில்நுட்ப நோக்கில் மேம்பட்ட செயற்கை பவளப் பாறைத் திட்டத்தைகை கொண்டுள்ளது.

இந்தியாவில் செயற்கைப் பவளப் பாறையை உருவாக்கும் தொழில் நுட்பம் பாரம்பரிய மீனவர்களால் உருவாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும், செயற்கை பவளப் பாறை களின்மூலம் மீன்வளத்திறனைப் பெருக்க, அரசு சாரா நிறுவனங்கள் முயற்சியை மேற்கொண்டன.

இந்தியரவில் திருவனந்தபுரம், கொச்சி, இலட்சத்தீவு, தூத்துக்குடி ஆகியபகுதிகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், செயற்கை பவளப் பாறைகளின் முலம் மீன் வளத்தை பெருக்கும் திட்டத்தைச் செயற்படுத்திஉள்ளன.

கடலின்ஆழம், கடல்அடி மட்டத்தின் இயற்கைத் தன்மை மற்றும் மீன்வளத்தைப் பொறுத்து, செயற்கை பவளப்பாறைகள் வடிவமைக்கப்பட்டன. முக் கோணவடிவ, செவ்வகவடிவ, வட்டவடிவச் செயற்கை பவளப் பாறைகள் மற்றும் கான்கிரீட் படுக்கைகள், பழைய டயர்கள் போன்றவை, செயற்கை பவளப் பாறைகளாக இந்தியாவில் பயன் படுகின்றன.

### செயற்கை பவளப் பாறைகளின் பயன்பாடு

கடலில் உருவான இயற்கை பவளப்பாறைகள்சுற்றுச்சூழல் பாதிப்பு,வாழ்விடம் அழிக்கப்படுதல், காலநிலைமாற்றம், மீன் வளம் சுரண்டப்படுதல், அதிக ஆற்றலுள்ள மீன்பிடிப்பு முறைகள் மற்றும் பவளப்பாறைகளில் உள்ள கல்சியம் சுரண்டப்படுதல் போன்றகாரணங்களால் இயற்கை பவளப்பாறைகள் அழிந்து வருகின்றன.

செயற்கை பவளப் பாறைகள் அமைப்பதன் மூலம், பவளப் பாறைகளை சார்ந்துவாழும் மீன்களைப்பெருக்குவதுடன், மீன்பிடித் திறனையும் கூட்டலாம் கைத்துண்டில், கம்புத்தூண்டில், ஆயிரங்கால் தூண்டில் போன்ற மீன்பிடிப்பு முறைகள் செயற்கை பவளப் பாறைகள்அமைந்துள்ள இடங்களில் மீன்பிடிப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

### பொருட்களும் தேர்ந்தெடுக்கும் முறைகளும்

இரண்டு வகைகளில் செயற்கை பவளப் பாறைகளை உருவாக்கலாம். அதாவது, இயற்கையாகக் கிடைக்கும் பாறைகள், மரக் கட்டைகளைக் கொண்டு அமைப்பது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவுக்கு...

யான அவர் ஒரு வருடமாக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்து நான்கு மாதங்களுக்கு முன்னரே விடுதலையாகி இருந்தார்.

ஆலயத்தில் பூசாரியாக இருந்த இவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பூஜை முடித்துவிட்டு அயலில் உள்ள ஆட்கள் அற்ற வீட்டில் ஹெரோயினை ஊசிமூலம் செலுத்தியுள்ளார்.

அவரைக் காணாத நிலையில் அவரது சகோதரி தேடி சென்றபோது நேற்று வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் அவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சடலத்தின் அருகில் மருந்து செலுத்தும் ஊசியும் காணப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் யாழ். போதனா.வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பிரேத பரிசோதனையில் அதிகளவான ஹெரோயின் பாவித்ததால் உயிரிழப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-60)

## போதையுடன்...

னர்.

யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதலுக்குஅமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபடுவோர் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானோரை கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்றைய தினம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு, கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளை சேர்ந்த 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள். கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தின் முற்படுத்தப்படவுள்ளனர். (ம-33)

## 125 கிலோ...

கிழமை அதிகாலை கடற்படை யினர் ரோந்து சென்று கொண்டிருந்த போது மாமுனை கடற்பரப்பில் மிதந்து வந்த 53 பொதிகளை கடற்படையினர் மீட்டுள்ளனர். (ம-60)

## மோ.சைக்கிள்...

யில் வரணிப் பகுதியில் காவடிகள் சென்று கொண்டிருந்தபோது இடது பக்கமாக நடந்து சென்ற அவர் வலது பக்கமாக உள்ள கடைக்கு செல்ல முற்பட்டபோது எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9:30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-60)

## 10 அத்தியாவசிய...

ரூபாயாக குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்வுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் காய்ந்த மிளகாயின் விலை 60 ரூபாயினால் குறைக்கப்பட்டு 1,290 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

பருப்பு கிலோ ஒன்றின் விலை 15 ரூபாயினால் குறைக்கப்பட்டு 299 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அத்துடன், சிவப்பு நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை 200 ரூபாயாகவும் நெத்தலி கிலோ ஒன்றின் விலை 1,140 ரூபாயாகவும் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 200 ரூபாயாகவும் சோயா மீட் கிலோ ஒன்றின் விலை 650 ரூபாயாகவும்,சிவப்பு அரிசி கிலோ ஒன்றின் விலை 139 ரூபாயாகவும் ஒரு கிலோ கிராம் கடலையின் விலை 540 ரூபாயாகவும் குறைக்கப்படவுள்ளது. (ம)

## வவுனியாவில்...

தனியார் வைத்தியசாலையில் கடமையில் இருந்த மருத்துவர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் .சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட

எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்த நிலையில் சட்டமா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப் பட்டது.

மேல்நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்று தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது.

அந்தவகையில் உயிரிழந்தவரின் உடலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள் எதிரியினால் பயன்படுத்தப்பட்டிருப்பதாக மன்று திருப்தியடைந்தது. அந்த வகையில் எதிரி குற்றவாளியாக இனங்காணப்படுவதாக மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதற்கமைய அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

வவுனியாவை சேர்ந்த நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிறேமநாத் என்ற நபருக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் 14 வருடங்களாக வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்திருந்தது. நேற்று தீர்ப்பின் பின்னர் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-299)

## இலங்கை...

போக்குவரத்து மிக முக்கியமான ஒன்று. அந்தவகையில் அந்த போக்குவரத்தை மேம்படுத்த இரு நாட்டு அரசுகளும் முயற்சிக்கிறது என்றார். (ம-33)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1594
வெற்றி இலக்கங்கள்
மீனம் 9 3 7 1 9 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1169
I 55 59 64 77
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.08 / சீட்டிழுப்பு இலக்கம் 3381
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
S 12 25 66 78
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1487
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
G 09 31 59 67 70

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.08
சீட்டிழுப்பு இலக்கம் 448
ரிஷபம் 01 13 48 49 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/08
சீட்டிழுப்பு இலக்கம் 5139
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
P 3 7 0 8 8 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2113 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.06.08 | தினம் வியாழக்கிழமை
T 08 26 37 67
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,688,700/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.08
வெற்றி வாரம்: 4274
வர்ணம்: சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 49,400,587.50
வெற்றி இலக்கங்கள் 26 45 69 74
ஆங்கில எழுத்து P
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 6,746,869.60
வெற்றி இலக்கங்கள் 25 28 36 53
மீனம்
திகதி 2023-06-08
வெற்றி வாரம் 3825
வர்ணம் கபிலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 16,353,929.60/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 27 06 25 35 42
சுப்பர் இலக்கம்
1289
அரசுக நிறம்
2023.06.08
வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 336,167,455.80
DLB

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 600 | திகதி 2023-06-08 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 44 55 59 | விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,502,200.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அද கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 1939
வர்ணம்: இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.08
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 51,516,552.20
வெற்றி இலக்கங்கள் 13 17 24 67
ஆங்கில எழுத்து S
DLB

யாழ்.நகரில் வெல்லப்பட்ட அதிர்ஷ்டம்
20 ரூபாவில் இலட்சம்
**மஹஜன சம்பத** டிக்கெட்டில் **(சீ.இ.5138)** 07.06.2023 (புதன்கிழமை) தேசிய லொத்தர் சபையின் யாழ்.நகர விற்பனை முகவரான **விஜயகுமார் கௌசல்யா (N-220067)** மூலம் **இருபது இலட்சம் (20,00,000) ரூபா** வெல்லப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
கௌசல்யா அதிர்ஷ்ட மாளிகை அதிர்ஷ்டத்தின் உத்தரவாதம்


யாழ்.நகர விற்பனை முகவர்
திருமதி விஜயகுமார் கௌச்ல்யா
(C-5698)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற தனியார் பேருந்தில் தயாநிதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (635740825V), ATM CARD, அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (15891)

**071 111 1269**



## A/L - 2025

கலை - வர்த்தகம் (தமிழ் & English)

ஆரம்பம் : 17.06.2023

காலை 9.00

DMI Jaffna (15899)

Dmi Daniel 077 848 0604


# துன்னாலை மேற்கில் 12 1/4 நகை திருட்டு

(கரணவாய்)

துன்னாலை மேற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் லவக்கப்பட்டிருந்த 12 1/4 பவுண் தங்க நகை திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மேற்படி வீட்டில் உள்ள பெண்மணியிடம் அவரின் மகள் தனது 12 1/4 பவுண் தங்க நகைகளை கொடுத்து விட்டு சென்றுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை காலை பார்த்த போதே நகை திருடப்பட்டமை தெரிய வந்ததாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)


## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2025

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 11.06.2023 காலை 8.00மணி (ஞாயிறு)

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

நிர்வாகம் : 077 011 9434 (C-6699)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6701)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.

அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

0768226240 / 0768226241 (C-6701)



## NEW SCIENCE WORLD

கணித விஞ்ஞானப் பிரிவுகள்

A/L 2025 Batch

Tamil And English Medium

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்கள் மற்றும் நேரடி வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதீகவியல் | திரு.R.குமரன், திரு.R.குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ், திரு.K.T.சிவகுமார் |
| உயிரியல் | திரு.N.T.கஜேந்திரன் |
| இணைந்த கணிதம் | திரு.S.S.செந்தில்ராஜ், திரு.G.V.ஹரிகரன் |
| ICT | திரு.T.லவேந்திரன் |

அனுமதிகளை 09.06.2023 அன்று காலை 5.20 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆரம்பம் : 14.06.2023 (புதன்கிழமை)

நேரம் 8.00Am

மேலதிக விபரங்களுக்கு 077 336 4055, 021 221 6690, 077 336 4030, 075 8364 055

NEW SCIENCE WORLD
Navalar Road, Brown Road Junction, Jaffna. (C-6700)



## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

புதிய கல்வியாண்டு - A/L 2025

திகதி : 11.06.2023 நேரம் : காலை 8.30

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் | ராகவன் (B.Sc), முருகநிரோஜன்(B.Sc), அச்சுதன் (B.Sc) |
| பொறியியல் தொழில்நுட்பம் | அருண்குமார் (B.Tech Hons(Eng), சிவஜன் (Lecturer), நிசாந்தன் (HNDE) |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | திருக்குமரன் (B.Sc in Agri), சுபாங்கன் (B.Sc in Agri), பவனீதன் (B.Sc in Agri) |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | உமாகாந்தன் (BIT), நஜன் (B.Sc) |
| விவசாய விஞ்ஞானம் | சாரங்கன் (B.Sc in Agri), திருக்குமரன் (B.Sc in Agri), சுபாங்கன் (B.Sc in Agri) |
| புவியியல் | S.S.கோகில் (B.A, P.G.D.E, M.Ed) |
| ஊடகக் கற்கை | கஜிதரன் (B.A) |
| கணிதம் | கிரிசாந் |
| சித்திரம் | ஜெயந்தன் (B.A) |

(C-6696)

தொடர்புகளுக்கு : 077 017 5346



## TECHNA Technical Institute

Smart thinking leads to innovate

A/L தொழினுட்பப்பிரிவு

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவு ஆரம்பம்

A/L 2025

11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணிக்கு

மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்கின்றீர்கள்!
- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு
- தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்
- ஒவ்வொரு பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்
- செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்
- இறுதிப்பரீட்சைக்கான திறைமையான தயார்ப்படுத்தல்

எமது ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் | M.விஷ்ணுதேவன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | S.சக்தி |
| ICT | T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | S.சஜீபன் |
| கணிதம் | T.சசிகரன் |
| புவியியல் | S.P.கரன் |

(15777)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 181, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org